# பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி

## பத்தாம் வகுப்பு / இயல் - 1

**செந்தமிழே ! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை**
**எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?**
**முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்**
**விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்**
**உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்**
**செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த**
**அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி**
**முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே !**

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) சச்சிதானந்தன் ஆ) பெருஞ்சித்திரனார் இ) தமிழழகனார் ஈ) பாரதிதாசன்

2. இப்பாடல் இடம் பெற்ற நூல்

அ) தென்மொழி ஆ) பாவியக்கொத்து இ) கனிச்சாறு ஈ) மகபுகுவஞ்சி

3. இப்பாடலில் இடம் பெற்றுள்ள எதுகை நயம் காண்க:-

அ) முந்தை - விந்தை ஆ) உந்தி - உணர் இ) இலக்கியமும் - புகழுரையும்
ஈ) செந்தமிழே - செப்பரிய

4. எந்தமிழ்நா - பிரித்து எழுதுக:-

அ) எந்+தமிழ்+நா ஆ) எந்தன்+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்த+தமிழ்+நா

5. கனல் - என்பதன் பொருள் யாது?

அ) நெருப்பு ஆ) நீர் இ) மேகம் ஈ) சினம்

6. செந்தமிழ் - இலக்கண குறிப்பு தருக;-

அ) வினைத்தொகை ஆ) வேற்றுமைத் தொகை இ) பண்புத்தொகை
ஈ) உவமைத் தொகை

7. பெருமை என்பது இங்கு எதனைச் சுட்டுகிறது?

அ) ஆசிரியரின் புகழ் ஆ) தமிழின் புகழ் இ) தமிழின் சிறப்புகள்
ஈ) ஆசிரியரின் சிறப்புகள்